# ஹெச்எஸ்டி (HST) பற்றி நீங்கள் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை

ஜனவரி 2011

இப்போதிருக்கும் மாநில சில்லறை விற்பனை வரிக்கு (RST - Retail Sales Tax) பதிலாக கூட்டாட்சியின் பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை (GST - Goods and Services Tax) அத்துடன் இணைத்து, ஒருங்கிணைக்கப்பட்ட விற்பனை வரி (HST - Harmonized Sales Tax) ஒன்ராறியோவில் ஜூலை 1, 2010 முதல் நடைமுறையில் உள்ளது.

நீங்கள் **படிவங்களின் ஒரு தொகுப்பை** மட்டுமே கையாளுதல், ஒரு முறை பணம் செலுத்தல் மற்றும் தணிக்கைகள், மேல்முறையீடுகள், மற்றும் வரிசெலுத்துவோர் சேவை ஆகியவற்றிற்கு ஒரு முனை தொடர்பு கொள்ளல் ஆகியவையே ஹெச்எஸ்டிக்கு மாறுவதன் பொருளாகும். சரி பார்ப்புப் பட்டியலானது, ஜூலை 01, 2010 அன்று நடைமுறைக்கு வந்த ஹெச்எஸ்டி பற்றி, நீங்கள் அறியவேண்டியவற்றுக்கான பொதுவான ஒரு வழிகாட்டியாகும்.

☑ ஹெச்எஸ்டியானது ஜிஎஸ்டியை (GST) அடிப்படையாகக் கொண்டு, அத்துடன் மாநில பாகத்தையும் 13% வீதத்தை அடையும் வண்ணம் கூடுதலாகக் கொண்டதாகும். இப்போது ஜிஎஸ்டி (GST) செயற்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றால், ஜூலை 1, 2010க்கு மேல் ஹெச்எஸ்டி (HST) செயல்படுத்தப்பட்டிருக்காது. மாநில விற்பனை தள்ளுபடி முனை என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு 5% வரி மட்டுமே விதிக்கப்படுகின்றது என்று பொருள்படும்.

☑ நீங்கள் ஏற்கனவே ஜிஎஸ்டிக்கு (GST) பதிவு செய்திருந்தீர்கள் என்றால், மேற்கொண்டு பதிவு செய்ய வேண்டியதில்லை. நீங்கள் ஜிஎஸ்டிக்கு (GST) பதிவு செய்யக் கோரப்படவில்லையெனில், ஹெச்எஸ்டிக்கு (HST) நீங்கள் பதிவு செய்யத் தேவை இல்லை.

☑ ஹெச்எஸ்டி அறிக்கை காலமானது உங்களது ஜிஎஸ்டி (GST) அறிக்கை காலத்தைப் போன்றே இருக்கும். உங்களது ஜிஎஸ்டி (GST) மற்றும் ஹெச்எஸ்டிக்காக (HST) விதிக்கப்பட்ட மற்றும், பெற்றுக்கொள்ளப்பட்ட வரிவிதிப்புகளை நீங்கள் அறிவிக்க வேண்டும். மேலும் நீங்கள் ஜிஎஸ்டியை (GST) செயல்படுத்தும் அதே விதமாகவே உங்களது உள்ளீடு வரி வரவுகள், மற்றும் தள்ளுபடிகளை உரிமை கோருவீர்கள்.

☑ ஆர்எஸ்டியை (RST) நீக்கி ஹெச்எஸ்டிக்கு (HST) மாறுவதற்காக நீங்கள் வலை இடைமுகங்கள், மற்றும் தானியங்கு பணங்கொடுப்புகள் உள்ளிட்ட கணக்கு வைப்பு, விலைவிவரப்பட்டியலிடல் மற்றும் விலைப்பட்டி குறிக்கும் அமைப்புகள், பணக் குறிப்பேடு, விற்பனை அமைப்பு முனை ஆகியவற்றில் சிறிது மாற்றம் செய்திருக்க வேண்டும். மாறுதலுக்கான விதிகளின் படி ஜூலை 1, 2010க்குப் பின்னர் செய்யப்படும் கொள்முதல்களில் 8% ஆர்எஸ்டி (RST) விலையை வரவு செலவுத் திட்டங்களில் நீக்கப்பட்டிருப்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும். வரிக்குள்ளாகும் ஆதாயக் கணக்குகளையும் நீங்கள் நிகழ்நிலைப்படுத்த வேண்டும்.

☑ ஜூலை 01, 2010க்கு முன்னர் தொடங்கி இந்த நாளுக்குப் பின்னர் முடிவடையும் பணப் பரிமாற்ற நடவடிக்கைகளுக்கான குழப்பங்களைத் தவிர்க்க மாறிய விதிகளைக் கலந்தாலோசியுங்கள். ஜூலை 1, 2010க்குப் பின்னர் வழங்கப்படும் வரிக்குள்ளாகும் பொருள்கள், சேவைகள் அல்லது உணரமுடியா சொத்துக்கள் ஆகியவற்றிற்காக, மே 1, 2010 அன்றோ அதற்குப் பின்னரோ, எந்த விலைப்பட்டியல்களிலும் உரிய விதத்தில் ஹெச்எஸ்டியை (HST) நீங்கள் விதித்திருப்பதை உறுதி செய்யுங்கள். விநியோகிக்கப்படும் இடம் பற்றிய விதிகள் மற்றும் உள்ளீடு வரி வரவுகள் மீதான தற்காலிக கட்டுப்பாடுகள் பற்றி தெரிந்து பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

☑ வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைந்த செலவு மற்றும் வணிகக் கொள்முதலில் நிலை மாற்றங்களுக்குப் பொறுப்பாகும் வணிகத் திட்டங்கள் மீதான ஹெச்எஸ்டியின் (HST) தாக்கத்தை மதிப்பிடுங்கள். விலை நிர்ணய உத்திகளை மதிப்பிடுங்கள். மேலும் பொருள் வழங்குவோரின் விலைப்புள்ளிகளை வரி சேமிப்புகள் கொடுக்கப்பட்டதை உறுதி செய்வதற்காக ஆழ்ந்து சோதியுங்கள்.

☑ உங்களது இறுதியான ஆர்எஸ்டி (RST) விவரத் தாக்கல் ஜூலை 23, 2010 அன்றோ அதற்கு முன்னரோ அளிக்கப்பட்டிருக்கவேண்டும். துணை விவரத் தாக்கல்கள் ஜூலை 1, 2010க்குப் பின்னர் சேகரிக்கப்படும் ஆர்எஸ்டி (RST) தொகைகளை அறிவிப்பதற்காகக் கிடைக்கப்பெறும்.

**நீங்கள் வருமானவரி குறைப்புகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்தீர்களா?**

நினைவிலிருத்துங்கள், ஹெச்எஸ்டி (HST), வாணிபத்திற்கும் மக்களுக்கும் குறிப்பிடத்தக்க வரிக் குறைப்புகளை உள்ளடக்கிய விரிவான வரித் தொகுப்பின் ஓர் அங்கம்.

*இந்தச் சரிபார்ப்புப் பட்டியல் கனடா இறைவரி முகவம் (CRA - Canada Revenue Agency) அல்லது ஒன்ராறியோ இறைவரி அமைச்சிலிருந்து நேரடியாக உங்களுக்குக் கிடைக்கப்பெறும் விரிவான தகவலை முழுமையாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## மேலும் அதிக தகவலுக்கு:

உங்களது வணிகம் ஹெச்எஸ்டியினால் எப்படி ஆதாயம் பெறும் என்பதை மேலும் அதிகம் அறிய வருகை புரியுங்கள்: **ontario.ca/taxchange**. நீங்கள் 1 800 337-7222 மற்றும், டெலிடைப்ரைட்டர் (டிடிஒய்) 1 800 263-7776 ஐயும் அழைக்கலாம்.

எப்படி மாற்ற விதிகள் செயல்படும் மற்றும் ஹெச்எஸ்டி பற்றிஎன்பது பற்றிய சமீபத்திய தகவலுக்கு கனடா இறைவரி முகவம் உங்களுக்கான ஆதாரமாகும். சிஆர்ஏயின் **cra.gc.ca/gsthst** இணையத்தளத்திற்கு வருகை புரியுங்கள் அல்லது 1 800 959-5525 ஐ அழையுங்கள்.

© க்வீன்ஸ் பிரிண்டர் பார் ஒன்ராறியோ, 2011
ISBN 978-1-4435-5916-4 (பிரிண்ட்) • ISBN 978-1-4435-5917-1 (பிடிஎப்)